ராதாபுரம் கால்வாய் பாசனப்பகுதியில் வரி விதிப்பு

*வினா எண். 66 — திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிற்றாறு பட்டினங்கால் திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள ராதாபுரம் கால்வாய் பாசனப் பகுதிகளில் வசூலிக்கும் மொத்த நில வரி, தல வரி, முன்னேற்ற வரி இவைகளைக் குறைக்கக் கோரி அரசுக்கு பொது மக்கள் முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் பாசனக் கட்டண விகிதங்களைச் சீரமைக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைத்தபின் இறுதி முடிவு எடுக்கப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, ராதாபுரம் கால்வாய்த் திட்டத்தில் ஏற்கனவே குமரி மாவட்டம் பேச்சிப்பாறை தண்ணீர் விடப்படுகிறது. அப்படி இருக்கிற காரணத்தால் ஒரு ஆண்டில் 10 அல்லது 15 நாட்களுக்குத்தான் அந்தக் கால்வாயில் தண்ணீர் செல்கிறது. அப்படி இருந்த போதிலும், நில வரி, தல வரி, தனி வரி என்று ஏக்கருக்கு ரூ.100-க்கும் குறையாமல் அங்கே வசூலிக்கும் நிலைமை இருப்பதால் நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்கள் இன்னலுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு உடனடியாக அதை நிறுத்துவதற்கு, குழு அறிக்கை தர காலதாமதம் ஆகும் என்கிற நிலைமையையும் கருத்தில் கொண்டு அரசு தனி ஆணை பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஏற்கனவே வருவாய் வாரியத்தின் நிலை ஆணை இருக்கிறது. ஆணை எண் 13-1 (1) மற்றும் 13-12 அந்த ஆணையின்படி வறட்சி காலத்தில் அல்லது தண்ணீர் விடாத காலத்தில் வரி வசூலிக்கக் கூடாது அல்லது தள்ளி வைக்க வேண்டும். தண்ணீர் குறைவாகப் போனாலும், அப்படி குறைவாகப் போகிறபோது வசூலிக்கக்கூடாது என்று ஆணை இருக்கிறது. அந்த ஆணைப்படி வசூலிக்கக்கூடாது என்று உத்தரவு அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, ராதாபுரத்தைப் பொறுத்த மட்டில் எல்லா இடங்களிலும் எல்லா வரியையும் வசூலிக்க வில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 17]

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, ராதாபுரத்தில் வரி வசூல் செய்யப்படுவதாக நான் சொல்லவில்லை. என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், அந்தப் பகுதியில் நிர்ணயிக்கப் பட்டுள்ள வரி மிகவும் அதிகமாக இருக்கிறது. மேலும் அங்கே நில வரி, மேல் வரி ஆகியவற்றைக் கணக்கிட்டு தல வரி வசூலிக் கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்கள் தல வரி அதிகமாக கட்டவேண்டியிருப்பதால் ஏறத்தாழ ஏக்கருக்கு ரூ.100 க்குமேல் செலுத்த வேண்டி இருக்கிறது, தல வரி இவ்வளவு என்று நிர்ண யித்தால் நல்லது. 3—4 ஆண்டுகளாக வசூலிக்கப்படாமல் இருப்பது இப்போது அவற்றை சேர்த்து வசூலித்தால் அது விவசாயிகளை மிகவும் பாதிக்கும். ஆகவே, அதையும் கருத்தில் கொண்டு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அந்தப் பகுதியில் நிலவரி மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 1 ரூபாய்தான் நில வரி. மற்ற வரிகள் எதுவும் அங்கே வசூலிக்கப்படவில்லை. நீர் போதுமான அளவிற்குப் பாசனத்திற்குக் கொடுத்தால்தான் வரி வசூலிக்கப்படும். தண்ணீர் கொடுக்கப்படாத நிலத்திற்கு வரி வசூலிக்கப்பட மாட்டாது என்கிற உத்திரவாதத்தை நான் இங்கே தருகிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் யூசுப் அவர்கள் கூறியதைப்போல பட்டணங்கால் பாசனத்தில் இராதாபுரம், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற சில பகுதிகள்—அங்கெல்லாம் இம்மாதிரியாக வரி வசூல் செய்யப்படுகிறது. அதிலும் குறிப்பாக 84, 85-ம் ஆண்டுகளுக்கு 'அடிஷனல் வெட் அசெஸ்மெண்ட், அடிஷனல் வாட்டர் செஸ்' போன்ற பாக்கிகளை எல்லாம் சேர்த்து 86-ம் ஆண்டில் வசூலிக்க முடிவு செய்திருப்பதாக அறிகிறோம். பாக்கிகளை வசூல் செய்வது என்றால் அது நியாயமானது அல்ல. ஆகவே, பாக்கிகளை வசூல் செய்வதை நிறுத்தி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, 84, 85 ஆண்டு என்று உறுப்பினர் தவறாகச் சொல்லிவிட்டார்கள். அது 84-ம் பசலி ஆண்டு, 85-ம் பசலி ஆண்டு என்று கருதுகிறேன். அவைகளுக்கு எந்தெந்த ஆண்டு களில் வரி தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதோ அவை எல்லா வற்றையும் இப்போது வசூலிக்கக்கூடாது என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அடிஷனல் வெட் அசெஸ்மென்ட், அடிஷனல் வாட்டர் செஸ்—இந்த இரண்டு வரிகளையும் இப் போதுதான் அந்த பகுதியில் புகுத்தியிருக்கிறார்கள். ஆகவே,

அந்த ஆணையில் ஏற்கனவே உள்ள 84, 85 பசலி ஆண்டு களுக்கும் சேர்த்து வசூல் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. அதனால் பாக்கிகளை வசூல் செய்வதை நிறுத்தி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: தலைவரவர்களே, புதிதாக எப்போது வந்தது என்பது அவர்களுக்குத் தெரியும். புதிதாக என்று சொல்வது அரசினுடைய எமர்ஜன்சி காலத்தில் வந்தது. அவைகள் எல்லாம் அந்த ஆண்டுக்கு மேல் வசூல் செய்யப்படாமல் பல மாவட்டங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இப்போதும் அவைகளை ஆராய்ந்து பார்த்து, அதில் எந்தக் குறை இருந்தாலும் குறைகளை நிவர்த்தி செய்து வசூல் செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

சமயபுரம் மாரியம்மன் கோவில் தேர்

*வினா எண். 67—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயபுரம் மாரியம்மனுக்கு ''தங்கத் தேர்'' அமைக்கப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) அரசு இப்பணிக்கு மான்யம் ஏதேனும் கொடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) ரூ. 4,34,104/-

(இ) இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, ஏரோட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தங்கத் தேரோட்டம் தேவை தானா? அதிலும் தங்க விலையைப் பார்த்தால் தாலிக்குக்கூட தங்கம் வாங்க முடியாத சூழ்நிலையில் தேருக்கு தங்கம் அளிக்க அரசு அனுமதிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறதா? அரசுதான் அதை அனுமதிக்க வேண்டுமென்றால் அதை நிறுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட கோயில் திருப்பணிகளுக்கு அரசு மானியம் வழங்குகிற போதுதான் அனுமதி என்ற பிரச்சனை எழுகிறது. இது அரசு மானியத்தில் செய்யப்படுவதில்லை. பொதுமக்கள், பக்தர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS